# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூன் 29, 2019

Weekly E-paper • JUNE 29, 2019




# ஒரே நாடு ஒரே "கார்டு"

சுபவீரபாண்டியன்



## ஆணவப்படுகொலை

'பைந்தமிழ்' பாபு

## பதுங்கி நுழையும் கோழை

தலையங்கம்




## 'ஜெய் ஸ்ரீராம்', 'ஜெய் அனுமான்'

மா.உதயகுமார்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஜூன் 29, 2019

Weekly E-paper ● JUNE 29, 2019

# ஒரே நாடு ஒரே "கார்டு"

சுப.வீரபாண்டியன்



"ஒரே...."வரிசையில் இப்போது வந்திருப்பது, இந்தியா முழுவதும் ஒரே குடும்ப அட்டை என்பதாகும். ஏழைகளுக்கு நன்மை செய்வதற்காக, ஊழலை ஒழிப்பதற்காக, இரண்டு அட்டைகள் வைத்திருப்பதைத் தடுப்பதற்காக......என்று இதற்குப் பல்வேறு நியாயங்கள் கற்பிக்கப்படுகின்றன. இப்படித்தான், 1,000 ரூபாய், 500 ரூபாய்த் தாள்களைச் செல்லாதவை என்று அறிவிக்கும்போதும் பல காரணங்களைச் சொன்னார்கள். ஒன்று கூட நடைமுறையில் உண்மையாகவில்லை.

பொது விநியோக முறையில் இந்தியாவிலேயே தமிழகம்தான் இன்றும் முதலிடத்தில் நிற்கிறது. வடமாநிலங்கள் பலவற்றில் இந்த விநியோக முறை மிகவும் பின்தங்கி உள்ளது. 1966ஆம் ஆண்டு தமிழகம் கடுமையான அரிசிப் பஞ்சத்தில் தவித்தது. அறிஞர் அண்ணா ஆட்சியேற்று ஆறு மாதங்களில் அது சரி செய்யப்பட்டது என்பது வரலாற்று உண்மை. இது குறித்து எவரும் பேசுவதில்லை. இந்தியா முழுவதும் ஒரே குடும்ப அட்டை என்கின்றனர்.

ஒரே மாநிலத்தில் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு மாற்றலாகிப் போகின்றவர்கள் தங்கள் குடும்ப அட்டையை மாற்றிக் கொள்வதற்கே பெரும் பாடாக இருக்கிறது. இப்போது இந்தியா முழுவதும் எங்கு சென்றாலும் ஒரே அட்டையை வைத்துக் கொள்ளலாம் என்கின்றனர். வட மாநிலங்களிலிருந்து தென்னிந்தியா நோக்கி, குறிப்பாகத் தமிழகம் நோக்கி இப்போது சாரை சாரையாகத் தொழிலாளர்கள் வருகின்றனர்.

அவர்களுக்கான திட்டமாகவே இது தெரிகிறது.

ஒட்டுமொத்தமாக, இந்த "ஒரே...." வரிசைத் திட்டங்களில் ஒளிந்திருப்பது இரண்டே இரண்டுதான். ஒன்று, தேசிய இனங்களின் அடையாளங்களை முற்றிலுமாக அழிப்பது. இரண்டாவது, மாநில சுயாட்சி என்னும் கோட்பாட்டை முற்றிலுமாகத் தகர்த்து, மத்திய அரசு மட்டுமே வலிமையான, ஒரே அரசாக ஆவதற்கு வழிவகை செய்வது!

ஒவ்வொருவருக்கும் அடையாளம் என்பது உயிர்நாடியைப் போன்றது. அந்த அடையாளத்தை அழித்து, அனைவருக்கும் ஒரே மாதிரியான அடையாளத்தைக் கொடுக்க முயல்வது, ஜனநாயகத்திற்கு நூற்றுக்கு நூறு எதிரானது. ஒற்றுமையாய் வாழ்வது வேறு, ஒரே மாதிரி வாழ்வது வேறு. எல்லோரும் ஒரே மாதிரி, ஒரே மொழியைப் பேச வேண்டும், ஒரே மாதிரியான உணவைத்தான் உண்ண வேண்டும், ஒரே மதத்தைத்தான் பின்பற்ற வேண்டும் என்பதெல்லாம் சர்வாதிகாரத்தின் சாரமேயன்றி வேறில்லை.

மத்திய அரசு வெறும் ஒருங்கிணைப்பு அரசாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதும், மாநில அரசுகளே கூடுதல் அதிகாரம் உடையவைகளாக இருக்க வேண்டும் என்பதும் மாநில சுயாட்சிக் கோட்பாட்டின் அடிப்படை. எஞ்சிய அதிகாரங்களும் (residual powers) மாநில அரசுகளிடமே இருக்க வேண்டும். ஆனால் இவை அனைத்திற்கும் எதிரான போக்கையே மத்திய அரசு கட்டவிழ்த்து விடுகிறது.

"ஏகம்" என்பது வன்முறை. "அநேகம்" என்பதே நன்முறை .

●

ஒட்டுமொத்தமாக, இந்த "ஒரே...." வரிசைத் திட்டங்களில் ஒளிந்திருப்பது இரண்டே இரண்டுதான். ஒன்று, தேசிய இனங்களின் அடையாளங்களை முற்றிலுமாக அழிப்பது. இரண்டாவது, மாநில சுயாட்சி என்னும் கோட்பாட்டை முற்றிலுமாகத் தகர்த்து, மத்திய அரசு மட்டுமே வலிமையான, ஒரே அரசாக ஆவதற்கு வழிவகை செய்வது!

# மதவாதம்–சாதியம் ஆணவப்படுகொலை

‘பைந்தமிழ்’ பாபு

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும்
எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம்
தாம் கலந்தனவே"

எனக் காதலர்களைத் கொண்டாடிய தமிழ்ச் சமூகத்தில்தான் இன்று ஆணவப் படுகொலைகள் தொடர்கின்றன..



சாதியத்தால் கொல்லப்பட்ட காதலர்கள்

தலித் சமூகத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்ய முயன்றதால், தம்பியை அண்ணனே ஆணவக்கொலை செய்த கொடூரம் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் நடந்திருக்கிறது.

மேட்டுப்பாளையம் ரங்கராயன் ஓடைப் பகுதியினைச் சேர்ந்த கனகராஜ் என்ற இளைஞர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த வர்சினி பிரியா என்ற பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்ய முயன்றதால் சொந்த அண்ணனாலேயே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கனகராஜும், வர்சினி பிரியாவும் பெற்றோர் மற்றும் உறவினர்களின் அரட்டல் மிரட்டல்களுக்கு அஞ்சாது நீண்ட நாட்களாகக் காதலித்து வந்துள்ளனர். இருவரும் வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், பெற்றோரின் கடும் எதிர்பை மீறி, சாதி மறுப்புத் திருமணம் செய்ய முடிவெடுத்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த கனகராஜின் அண்ணன் வினோத் கனகராஜ், வர்சினி பிரியா இருவரையும் சரமாரியாக அரிவாளால் வெட்டி உள்ளார். இதில், கனகராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது காதலி வர்சினி பிரியா உயிருக்கு ஆபத்தான நிலையில் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



சாதியக் கொலைகாரன்

இந்தச் சாதி ஆணவப்படுகொலை திட்டமிட்டே நிகழ்த்தப்பட்டது எனவும், முன்பே கனகராஜும் - வர்சினி பிரியாவும் திருமணம் செய்துகொண்டால் வெட்டி ஆற்றில் வீசுவோம் என கனகராஜின் அண்ணன் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் வர்சினி பிரியாவின் தாய் அமுதா செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

"என் மகள், கனகராஜைக் காதலிப்பது எங்களுக்கு முன்னரே தெரிய வந்தது. நாங்கள் அருந்ததியர்கள், அவர்கள் வேறு ஒரு இடைநிலைச் சாதியைச் சேர்ந்தவர்கள். சில நாட்களுக்கு முன் வினோத், மற்றும் அவருடன் சில பேர் ‘உங்கள் பெண்,எங்கள் சாதிப் பையனோடு பேசினால் வெட்டி ஆற்றில் வீசி விடுவோம்’ என்று எங்களை மிரட்டினார்கள். எனவே, நாங்கள் என் மகளை அவளது பாட்டி வீட்டில் கொண்டு போய் வைத்து இருந்தோம். அங்கிருந்து வெள்ளிக்கிழமை வீட்டை விட்டுச் சென்று விட்டார். இது தெரிந்து நாங்கள் அவர்களைத் தேடி வந்த பொழுது, அந்தச் சாதியை சேர்ந்த ஒரு சிலர் நடு இரவில் எங்கள் வீட்டிற்கு வந்து உன் மகள் மட்டும் கனகராஜோடு போய் இருந்தால் அவ்வளவுதான் என்று, எங்கள் சாதியின் பெயரைச் சொல்லி மோசமான வார்த்தைகளால் மிரட்டினார்கள். எங்கள் பெண்ணுக்கு ஏதும் நேர்ந்துவிடக் கூடாது என்று பதற்றத்தோடு தேடிய பொழுதுதான் நேற்று இந்தச் செய்தி வந்தது," என்று கண்ணீர் மல்கக் கூறினார்.

தமிழகத்தில் ஆணவக் கொலை எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. ஆனால், பாஜகவின் எடுபிடியாக இருக்கும் அதிமுக அரசு இதை ஒப்புக்கொள்வதே இல்லை.

கடந்த 2018ஆம் ஆண்டு வெளிவந்த ஓர் ஆய்வறிக்கை, 80-க்கும் மேற்பட்ட ஆணவக் கொலைகள் கடந்த ஓராண்டில் நடந்திருப்பதாகவும், கடந்த மூன்றாண்டுகளில் முந்நூறுக்கும் மேற்பட்ட ஆணவக் கொலைகள் நடந்திருப்பதாகவும் தெரிவிக்கிறது.

தர்மபுரி இளவரசன், உடுமலைப்பேட்டை சங்கர், கோகுல் ராஜ், என ஆணவக்கொலைகள் தொடர்வதன் காரணம் சமீபகாலமாகத் தமிழகத்தில் வேரூன்றியிருக்கும் மதவாதமும் சாதியப் போக்குமே ஆகும்.

இத்தகைய சாதிவெறிக்கு இரையாகிக் கொண்டிருக்கும் மக்களின் வலியைப் புரிந்துகொண்டு அரசு உடனடியாக ஆணவப் படுகொலைக்கு எதிரான கடுமையான சட்டத்தை இயற்ற வேண்டும். மேலும் சாதி ஒழிப்பில், காதல் திருமணத்தில் நம்பிக்கையுடையவர்கள் இதற்கான முன்னெடுப்புகளை எடுக்க வேண்டும்.

அது மட்டுமன்றி சாதி ஒழிப்பின் தேவை குறித்தும் ஆண் பெண் உறவு பற்றியும் பாடத்திட்டத்தில் சேர்ப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

ஏனெனில் ஆணும் பெண்ணும் காதலிப்பது, திருமணம் புரிவது, அல்லது திருமணமின்றி ஓர் இல்லத்தில் சேர்ந்து வாழ்வது, எல்லாம் அவர்களின் அடிப்படை உரிமை. இதில் மூக்கை நுழைப்பதற்கு யாருக்கும் உரிமையும் கிடையாது.

"சுதந்திரமான காதலுக்கு இடமிருந்தால்தான் ஒரு நாடோ ஒரு சமூகமோ அறிவு, அன்பு, நாகரிகம், முதலியவற்றில் பெருக்கமடையும். நிர்ப்பந்தத் திருமணம் இருக்குமிடத்தில் மிருகத்தன்மையும் அடிமைத்தன்மையும்தான் பெருகும்" என்கிறார் தந்தை பெரியார் ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162


## சென்னை



23-6-2019 அன்று, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைமை அலுவலகத்தில், சென்னை மாவட்டக் குழுவின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குப் பேரவையின் மாவட்டத் தலைவர் கார்த்திக் தலைமை தாங்கினார்.

## ஈரோடு



23-6-2019 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் ஈரோடு மாவட்டக் கிளையின் கலந்துரையாடல் கூட்டம் மாவட்டத் தலைவர் சேகர் தமைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில அமைப்புச் செயலாளர் தோழர் புலேந்திரன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துக்கொண்டார்.

## திருப்பூர்



23-6-2019 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் திருப்பூர் மாவட்டக் குழுவின் கலந்துரையாடல் கூட்டம் மாவட்டத்தலைவர் தண்டபாணி தலைமையில் நடைபெற்றது. மாநில மண்டலப் பொறுப்பாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.


தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்


## பதுங்கி நுழையும் கோழை




*தமிழகப் பெரியார் மண்ணில் தாமரை மலராது, தன்னால் வரமுடியாது என்பதனால் பள்ளிக்கூடங்களின் மூலம் இந்துத்துவச் சிந்தனையை திணித்து உள்ளே நுழைகிறது பாஜக. இச்செய்தியைச் சமூக வலைத்தளங்கள் பலவற்றில் பார்க்கமுடிகிறது*

*அ- அம்மா, ஆ- ஆடு, இ-இலை என்ற மதம் சாராத பழைய பாடத்திட்டத்தை மாற்றி, அ-அகத்தியர், ஆ-ஆஞ்சநேயர், இ-இமயம், ஈ-ஈசன் என்ற இந்துத்துவ அடிப்படை வாதத்தை மழலையர்களின் மூளையில் திணிக்கும் புதிய பாடத்திட்டத்தை இவ்வாண்டு கொண்டுவந்துள்ளது. இது வன்மையான கண்டனத்துக்குரியது.*

*அதுபோல 7ஆம் வகுப்புப் பாடப் புத்தகத்தில் இந்தியாவின் ஆட்சி மொழி இந்தி என அச்சிடப்பட்டிருந்தது.*

*8ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்தில் ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டுச் சென்றபின் இந்தியாவில் முஸ்லீம் ஆட்சியை நிறுவ முஸ்லீம் தலைவர்கள் முயன்றார்கள் என்றும்- காமராஜர், முத்துராமலிங்கம்(தேவர்), சாமி வைகுண்டர் ஆகியோர் பற்றியும் தவறான தகவல்கள் பள்ளிப் பாடப்புத்தகங்களில் இடம்பெற்றிருந்தன.*

*கல்வியாளர்கள், தமிழறிஞர்களின் கடுமையான எதிர்ப்பால் 7, 8, 10 ஆகிய வகுப்புகளில் மேற்சொன்னவைகளைத் திரும்பப் பெற்றிருப்பதாகத் தகவல்கள் வந்துள்ளன.*

*இதுமட்டுமில்லாமல் திருப்பூரில் ஒரு பள்ளிக்கூடத்திற்குத் துரோணரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.*

*துரோணருக்கும் தமிழ்நாட்டிற்கும் என்ன தொடர்பு? வடநாட்டுத் துரோணரைத் தமிழ்நாட்டில் நுழைத்து இந்துதுவாவைத் தூக்கி நிறுத்தப் பார்க்கிறது ஆர்.எஸ்.எஸ்.- பாஜக.*

*இப்படி நேரடியாக முகம் கொடுக்க முடியாமல், புறக்கடை வழியாகத் தமிழ்நாட்டிற்குள்ளும் நுழையும் மதவாத சக்திகளின் கோழைத்தனத்தைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.*

*ஆர்.எஸ்.எஸ்- பாஜக, பதுங்கி நுழையும் கோழைகள். ஆனாலும் தமிழகம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.*

## ஐம்பெரும் விழா




தமிழ் இலக்கிய உரையாசிரியர் புலியூர்க் கேசிகன் இலக்கியப் பேரவை, தமிழாய்வு அறக்கட்டளை இணைந்து நடத்திய ஐம்பெரும் விழாவில் பேரவை உறுப்பினர் இரா.உமாவிற்கு ஊடகவியல் துறைக்கான விருதினை, தமிழக அமைச்சர் பாண்டியராஜன் வழங்கினார்.

# வன்முறையின் முழக்கங்கள்
# ‘ஜெய் ஸ்ரீராம்’, ‘ஜெய் அனுமான்’

● மா.உதயகுமார்

பாரதிய ஜனதா கட்சியின் நாகரிகமற்ற ஆட்சியில் இந்த நாட்டு மக்கள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். மதவாத நீர் ஊற்றி இந்த நாட்டை விஷச் செடி நிறைந்த காடாய் மாற்றி வருகின்றனர். இந்த விஷச் செடிகளின் வேர்கள் மனித உயிர்களை உறிஞ்சுகின்றன.

ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள சராய்கேலா கர்ஸவன் மாவட்டத்தில் ஜூன் மாதம் 18ம் தேதி தப்ரெஸ் அன்சாரி எனும் 22 வயது இளைஞன் திருடச் சென்ற போது கையும் களவுமாக மாட்டிக்கொண்டான். ஊர்ப் பொதுமக்கள் ‘ஜெய் ஸ்ரீராம்’, ’ஜெய் அனுமான்’ என்று கூறச் சொல்லி வற்புறுத்தி, தாக்கிய காட்சி சமூக வலைதளங்களில் பரவிப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பின்னர் காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்ட அன்சாரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான்.

திருட வருகிறவன் கூட இந்துவாக இருக்க வேண்டும் என்கிற அளவிற்கு இவர்களிடம் மதவாதம் முற்றிப்போயிருக்கிறது. மனங்களில் மனிதநேயம் வற்றிப்போயிருக்கிறது.

இந்த நாட்டின் பிரதமர், தேர்தல் பரப்புரையின் போது ‘ஜெய் ஸ்ரீராம்’ என்று சொன்னார். மக்களவையிலும் பா.ஜ.க வினர் ‘ஜெய் ஸ்ரீராம்’ என்று கூச்சலிட்டனர். மதச்சார்பின்னமையைப் பாதுகாக்க வேண்டிய மக்களைவயிலேயே இப்படி அத்துமீறுபவர்கள் பிறகு எப்படி நாட்டில் மதச்சார்பின்மையைப் பாதுகாப்பார்கள்?

அண்மையில் அமெரிக்கா வெளியிட்ட அறிக்கையில் நேரடியாகவே இந்திய அரசும் பா.ஜ.க வும் சிறுபான்மையினர் நலனுக்கு எதிராகச் செயல்படுவதைச் சுட்டிக்காட்டியது.

இன்னும் பல்வேறு அமைப்புகளும், ஊடகங்களும் இதனைச் சுட்டிக்காட்டியிருக்கின்றன. இந்த நாட்டில் இன்று பிரதமராக இருப்பவருக்குச் சில ஆண்டுகளுக்கு முன் மதக் கலவரத்திற்காக விசா மறுத்தது அமெரிக்கா. இப்படிப்பட்ட வரலாற்றுப் பெருமை மிக்கவர் மோடி. இப்படிப்பட்டவர் உதிர்க்கும் வார்த்தைகள்தான் ‘ஜெய் ஸ்ரீராம்’, ’ஜெய் அனுமான்’. இந்த முழக்கங்களைக் கேட்டாலே பக்தர்களுக்குக் கூட இனி பயம் தான் வரும்.



நன்றி: பிபிசி நியூஸ்

மன்னர்கள் காலத்திலும் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடந்திருக்குமா என்று தெரியவில்லை. தங்களை “மக்கள் காவலர்கள்” என்று சொல்லிக்கொண்டார்கள். சொந்த நாட்டிலேயே மக்கள் அச்சத்தோடு வாழும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். புதிய இந்தியாவை உருவாக்குகிறோம் என்று சொல்லிப் பழைமைவாதத்தையும் பயங்கரவாதத்தையும் பயிரிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மனிதனை மனிதன் அடித்துக் கொல்லும் காட்டு மிராண்டித் தனத்தைச் செய்பவர்கள் யாரும் இது வரை முறையாகத் தண்டிக்கப்படவில்லை என்று புள்ளி விவரங்கள் சொல்கின்றன. ‘ஜெய் ஸ்ரீராம்’ ’ஜெய் அனுமான்’ என்று சொல்லிவிட்டால் வரம் கிடைக்கிறதோ இல்லையோ, இவர்களுக்கு பிணை கிடைத்துவிடுகிறது. இன்னும் தீவிரமாக மதக்கலவரங்களைச் செய்தால் பெரிய பெரிய பதவிகள் கிடைக்கும்.

ஒரு குடும்பத்தையே ஒருவர் உயிரோடு எரித்தார். அவர் மத்திய அமைச்சர். அவர் உரக்கச் சொல்கிறார் ‘ஜெய் ஸ்ரீராம்’.

குஜராத்தில் நடந்த மதக்கலவரங்களுக்காக முதலமைச்சராக இருந்தவருக்கு ஒரு வளர்ந்த நாடு அந்த நாட்டிற்குள் வருவதற்கான அனுமதி மறுத்தது. அவர் இன்று பிரதமர். அவரும் உரக்கச் சொல்கிறார் ‘ஜெய் ஸ்ரீராம்’.

திருட வந்தவனைக் காட்டுமிராண்டித் தனமாக அடித்தவர்களும் உரக்கச் சொல்கிறார்கள் ‘ஜெய் ஸ்ரீராம்’.

வன்முறை முழக்கமே ‘ஜெய் ஸ்ரீராம்’.

இனி இந்த நாட்டில் வன்முறை ஒழிய வேண்டும் என்றால், முதலில் ‘ஜெய் ஸ்ரீராம்’ என்னும் முழக்கத்தை ஒழிக்க வேண்டும்.

இந்த முழக்கம் இனிவரும் தலைமுறையின் காதுகளில் கேட்காமல் இருக்கட்டும். அவர்கள் மனிதர்களாக அரவணைப்போடு வாழட்டும்! ●




Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.